11

# மண்பூனைகளும் எலிபிடிக்கும்



வில்லுக்கத்தியும் ஆளுமாக, காமிது ஹாஜியார் அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்! அதுமட்டுமல்ல, நெருப்புப்பெட்டி ஒன்றையும் எடுத்து, இடுப்புச் சாறனுக்குள் செருகிக் கொண்டார்!

தோளில் ஒரு துண்டு; தலையில் கூர் விழுந்த ஒரு வட்டத்தொப்பி; தாடி மீசை; அடியும் நுனியும் தரித்த பனங்குத்தி மாதிரி, தோற்றம். அவர்தான் காமிது ஹாஜியார்.

'' இன்டைக்கி ரெண்டில ஒண்டு பார்த்துப்போட்டுத்தான், தண்ணி வென்னி குடிக்கிற தெண்டாலும் குடிப்பன்! குடும்பம், சாதிசனம் என்டெல்லாம் பார்த்தால், காரியம் நடக்கிறதில்ல! இது... காசோட கூடிய காரியம்; கண்ணான வாப்பா எண்டாலும் சரிதான், பிஸ்னஸ் என்டால் பிஸ்னஸ்தான்.

'தின்னவும் இல்லாம, தொழில் செய்ய வசதியுமில்லாம கிடக்கிறம்... பா, ஓடித்' தாங்க.... நெய்து சாறனத்தாறம்' என்டு கெஞ்சினதுக்கு...பா, ஓடிக்கொடுத்தா... ஒழுங்கா தொழிலச் செய்து, சாறனுகள தாறத விட்டிட்டு பக்கத்துக் கடையில நூல்விலை விசாரிக்கிறதும்.... இப்ப என்னடா என்டால்.... ஆட்டைக் கடிச்சி மாட்டைக்கடிச்சி... இப்ப, மனிசனை கடிக்கவந்தாச்சி.... அவன்- மஹ்மூது மரைக்கானுக்கல்லவோ, சாறன் நெய்து கொடுத்திற்று நூலும் வாங்கிறாளுகளாம்....

வேலிக்கு போட்ட முள்ளு.... காலுக்கு தைத்த மட்டும் இனிச் சரிவராது! கணக்கு வழக்கைப் பார்த்து கறந்து போட்டுத்தான் மறுவேல....''

புறங்கைக் கட்டைக்கட்டிக் கொண்டு, தன்பாட்டில் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்த காமிது ஹாஜியார், இவ்வாறு, உரத்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

''அந்த நேரத்திலேயே நான் சொன்னன்! கேட்டாத்தானே... மாமா-மருமகள் என்டு, உறவு கொண்டாடிக் கொண்டு வாறாளுகள்... நாளைக்கி கையில நாலு சதத்தை கண்டாளுகளெண்டால்... நமக்கு திரிவைப்பாளுகள்... எதுக்கும், அவளுகள்ட வளவுறுதிய வாங்கி வச்சிக் கொண்டு தறியை போட்டுக் குடுங்க... என்டு, வழிக்கு வழியாகச் சொன்னன். கேட்டாத்தானே... இப்ப, பட்டுக்கு இழுங்க...''

ஹாஜியாரின் தர்மபத்தினியும் தனது தீர்க்கதரிசனத்தைப் பறைசாற்றிக்கொண்டார்! ''அடியே! நீ, 'கத்தாதடி... குடுத்த எனக்கு வாங்கவும்தெரியும்! ஆனானப்பட்ட பூனையெல்லாம் மண்கவ்விற்று, இந்த, மண்பூனை வந்துதான எலிபிடிக்கப்போகிது....? அதுக்கு, வேற ஆள்தான் பார்க்க வேணும்.

....இந்தாங்க, விதானையார்.... நான் சொன்ன முறைப்பாட்டையெல்லாம் எழுதிக் கொண்டீங்க தானே....? எழும்புங்க போவம்''

ஹாஜியாரின் 'விஷேச' அழைப்பின் பேரில், சமூகமளித்து, அவரின் முறைப்பாட்டையும் எழுதி, அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கப் போவதற்காக வந்திருந்த விதானையார், சாவி கொடுத்துவிட்ட தலையாட்டிப் பொம்மையைப் போல, ஹாஜியார் முன் செல்ல, பின்னால் நடந்து கொண்டிருந்தார்.

தலைவாசல் கதவைத் தாண்டிய அவர்கள், கடற்கரைக் 'கொளனி'க்குப் போகின்ற அந்தக் கிறவல் றோட்டிலிருந்து இறங்கி, மணல் ஒழுங்கையில் நடந்து கொண்டிருந்தார்கள்.

''ஹாஜியார்... நான்... கேட்கிறன் என்று, கோபிக்காதீங்க... இப்ப நீங்கபோட்ட முறைப்பாட்டை விசாரித்து, ஒரு சமாதானத்துக்கு வரத்தானே போறம்...?''

''இதென்ன கேள்வி விதான...?''

''அப்ப... இந்த... வில்லுக்கத்தி, நெருப்புப் பெட்டி... எல்லாம் என்னத்துக்கு ஹாஜியார்....?''

''சும்மா, தொடை நடுங்காத விதான.... என்ன வந்தாலும், நான் உன்னக் காப்பாத்துவன்....! நீ யோசிக்காத....!''

''அப்பிடியெல்லாம் உங்கள்ள நம்பிக்கை இல்லாம கேட்கல்ல... நீங்க என்ன செய்யப் போறயள் என்றதை என்னிட்டயும் சொன்னால்... திட்டம் போட்டே விஷயத்தை வெல்லலாம்! அதுக்காகத்தான் கேட்டன்...''

''திட்டம்கிட்டமெல்லாம் போட்டு, செய்யிறதுக்கு...இது, விஷயம் காணாது! எறும்பு, காலைக்கடிக்கப்பார்க்கிது.... அதைக்கையால தட்டிறதுக்கு, என்ன திட்டமும் மண்ணாங்கட்டியும்?''

''அது சரிதான்... என்டாலும், குஞ்சிக்கோழி என்டாலும் குனிஞ்சிதான் அறுக்க வேணும்... அப்பிடியுமிருக்கு... அதுக்காகத்தான் சொன்னன்... இனி, உங்கட இஷ்டம்''

''அதுவும் சரிதான்...தறி நாலு போட்டுக்கொடுத்து... அவளுகள் நம்மிட்ட தொழில் செய்த வகையில், ஆயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தெட்டு ரூபாவும் சதக்கணக்கும் தருமதி இருக்கிது; அது நமக்கு இப்ப காசாக வேணும்

இல்லாட்டி, கிடக்கிற தறியளும் பாவும் நமக்காக வேணும் இதுதான் விஷயம்.

முதல்ல... இந்தக்கடன் தாறதா, இல்லையா? என்டு, கேட்கவேணும் 'தருவம்' என்டுதான் பதில்வரும் அப்பிடிச்சொன்னா.... அடுத்த கேள்வி, 'எப்ப தாறது?' என்டு கேட்க வேணும் அதுக்கு, 'கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தருவம்' என்டுதான் சொல்லுவாளுகள். அப்பிடிச் சொன்னா.... 'அதுவரைக்கும்... என்ன உத்தரவாதம்....?' என்டு, அதைத்தான் கேட்டுப்பிடிக்க வேணும்! அங்கதான் விதான ....ஒன்ட கெட்டித்தன மிரிக்கி....

இதுக்கெல்லாம் பிடி கிடைக்கல்லயோ, அதுக்குப் பொறகு, அதை, நான் பார்த்துக்குவன் . என்ன வந்தாலும் சரிதான் தறியில் கிடக்கிற பாவை அறுத்து, ஆரையென்டாலும் பிடிச்சி வீட்ட அனுப்பிரவேணும். அதுக்குப் பொறகு வீட்டவந்து, ஆக்கள் ரெண்டு பேரையும் வண்டிலையும் அனுப்பி, 'தறிகளை ஏத்திக்கொண்டு வாங்கடா' என்டால் வந்திருவானுகள்

இல்லாம... பாவை அறுக்க விடாம கத்திக்கொண்டு நின்டாளுகளெண்டால்... கடைசி மருந்துஒரு நெருப்புக்குச்சி! சொன்ன வார்த்தை கேட்கும்!''

''அப்பிடியெல்லாம் வராமல் .. ஒருமாதிரி சமர் பிடிக்கலாம் என்டுதான் எனக்குப் படுகிது.... ஏனென்டால் பாருங்க ஹாஜியார்... என்ன இருந்தாலும் அதுகள் உங்கட ரத்தம் ... உங்கட கூடப் பொறந்த ராத்தாவோட மகள் - மருமகள், பேத்தி... பிள்ளையள் தானே...?''

''விதான... இந்தத் தேவையில்லாத கதையளப் போட்டிட்டு நான், சொல்லிறாப் போல கேளு....''

''சரி ஹாஜியார்... ஆனாலும் எனக்கு இன்னொரு யோசனையும் படுகிது... அப்பிடிச்செய்தால், விஷயம் இன்னும் லேசாக முடிஞ்சிரும் என்டு நினைக்கிறன்....''

''அப்பிடி, என்ன யோசினையோ....?''

''பொலிஸுக்குப் போறதுக்கு திறமான றிப்போட் ஒன்டு தாறன், 'கொடுக்காப் போல கொடுத்து' பொலிஸயும் கையோடயே கூட்டி வந்திற்றால்... நினைச்சபடி விஷயத்தை முடிச்சிக்கலாம்''

''விதான...நீ, ஏன் பயந்து சாகிறாய்...? பொலிஸுக்கு போகத் தெரியாம, உன்ன, நான் கூட்டிக்கொண்டுவரல்ல.... குடும்பம், பிள்ளைகுட்டி என்டும் பாராம.... ஏதோ, நான்தான் பிழை செய்த மாதிரி, நாலுபேர் இவளுகளுக்காகவும் கதைப்பானுகளே... அதிலிருந்து தப்பத்தான் உன்னக் கூட்டிவாறன்.... என்ன, இப்ப விஷயம் விளங்கிதா விதான....? இது, காதோட காது வச்சாப் போல காரியத்தை முடிச்சுக்கலாம்.....''

''சரி, ஹாஜியார்''

''விதான... இனி, உன்ட ஆலோசன ஒன்டும் வேணாம் அந்தா.... தெரியுதே... தகரப் கடப்பு போட்ட வேலி... அதுக்குள்ள தெரியிறதுதான் வீடு''

மருதமுனைக் கிராமத்தின் மத்தியில், குடியிருப்புக் காணிகளுக்கு ஏற்பட்டு வருகின்ற தட்டுப்பாட்டிற்கு, கிராமத்தின் கடற்கரை ஓரமாக கிடந்த வெம்பு மணல்பூமி, ஓரளவுக்கு ஈடு கொடுத்தது

இந்த நிலைமையில், நிலம் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர், மேலதிகாரிகள், ஊழியர்களின் காலைக் கையைப் பிடித்து, ''குமர்குட்டிகள் கிடக்கிது... இருக்க நிலமில்ல, குடியிருக்க வீடுமில்ல'' என்று, முறைப்பாடு செய்ததன் பயனாகவும் அதிகாரிகளுக்கு 'அதை இதை'க் கொடுத்ததன் பேரிலும் ஒரு வளவுத் துண்டுக்கு 'பேமிட்' பெற்றதென்பது, மம்மதுப்பிள்ளை - செய்தும்மா தம்பதிகளைப் பொறுத்தமட்டில் ஒரு அறபு - இஸ்ரவேல் யுத்தம்தான்.

அந்த நேரத்தில் செய்யதும்மாவைப் பெற்றவர்கள்... தம்மால் முடிந்த மட்டும் சீரும் சிறப்புமாகத்தான் மம்மதுப்பிள்ளைக்கு 'முடித்து' வைத்தார்கள். அவர்களுக்கு தலைப்பிள்ளை பெண்ணாகப் பிறந்த அதிஷ்டம், மம்மதுப்பிள்ளை தம்பதிகளுக்கு சீதனமாக கிடைத்தது வீடும் வளவும் முதலாவது எடுத்த மருமகனிடம் பறிபோயிற்று.

அதுக்குப் பிறகு, பராயப்பட்டுப் போயிருந்த இரண்டு குமர்களையும், இளசுகளையும் அள்ளிக் கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை . நல்ல காலம், இந்தக் கடற்கரைக் 'கொளனி'யாவது தஞ்சமடையக் கிடைத்தது

மம்மதுப்பிள்ளை, கே.எம். மரைக்காரின் தம்மங்கடுவ, புகையிலை வாடியிலும், மாட்டு வாடியிலும் மாறி மாறி நின்று, தொழில் செய்து, காலத்தையெல்லாம் கரியாக்கியது மட்டுமல்லாமல், மரைக்காரை ஹாஜியாராகவும், ஒரு பெரிய போடியாராகவும் உயர்த்துவதற்கு உதவியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, உருக்குவாள் மாதிரி இருந்த தனது உடம்பை, தூண்டில் போடக் கொண்டு போகும் களைக்கம்பு மாதிரியும் ஆக்கி வைத்திருக்கிறார்.

செய்யதும்மாவின் விடாப்பிடியாலும் கெட்டித் தனத்தாலும் கடந்த சில ஆண்டுகளாக மம்மதுப்பிள்ளை ஊரோடயே நின்று, பரம்பரைத் தொழிலான நெசவுத் தொழிலைச் செய்து வருகிறார்.

கூலிக்கு, நெசவு செய்து கொண்டிருந்த மம்மதுப்பிள்ளைக்கும் குறிப்பாக, மருமகள் - செய்யதும்மாவுக்கும் ஹாஜியார் மாமா கூறிய மகத்தான ஆலோசனையின் பேரிலும் 'நமக்கும் சொந்தத்தில் தறிபோட வருகிறதே...' என்ற, ஒரு சின்ன ஆசையின் பேரிலும்தான் நாலு தறியும் அதுக்குத் தேவையான நூலும் உபகரணங்களும் 'நியாயமான' விலை போட்டுக் கொடுக்கப்பட்டது

தாயும் தகப்பனும் குமர்களும் குட்டியளுமாகக் கிடந்து இரவும் பகலும் சந்துப்பட்டை கடுக்க கடுக்க தறி அடித்ததுக்கும்... கட்டை, தார் சுத்தியதுக்கும் பொதுவில், தின்டதும் உண்டதும் சுண்டலும் சோறும்தான்! உடுத்ததும் போட்டதும் தறிக்கிடைத் துண்டுகள்தான். ஆனால் வருஷா வருஷம் நோன்புக்கு கணக்கு வழக்கு பார்க்கும் போது மட்டும் மாமாவுக்கு இரண்டாயிரம் ரூபாவுக்கு குறையாத கொடுமதி இருந்து கொண்டே வந்தது.

இந்த நிலைமையில், நெய்கிற சாறன்களை, பக்கத்து வியாபாரிகளுக்கு கூடிய விலைக்கு விற்கவும், குறைந்த விலைக்கு நூல், தேவையான சாமான்களை வாங்கவும் மம்மதுப்பிள்ளை - செய்யதும்மா தம்பதிகள் நினைத்தார்கள் என்பது உண்மைதான்! ஆனாலும்,'ஹாஜியார் மாமாவின் கடனை மாதாமாதம் இறுத்து முடிச்சிரவேணும்' என்பதில், செய்யதும்மா மிகவும் சிரத்தையோடுதான் இருந்தாள்.

தகரக்கதவில் தட்டுகிற சத்தம் கேட்டது,

''ஆரது....?''

''நான்தான், விதானையார் வந்திருக்கிறன்....''

''விதானையாரா....? வாங்க....'' என்று மம்மதுப்பிள்ளை கூறிக்கொண்டு, தறியிலிருந்து இறங்கி வாசலுக்கு வருவதற்கும், விதானையாரும் ஹாஜியாரும் வாசலில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''ஏன் வாசல்ல நிற்கிறீங்க...? இருக்க... திண்ணைக்கு வாங்களன்....''

‘‘இருக்க வரல்ல தொழில் செய்த வகையில் கடன் தருமதி கிடக்கிது... அத வாங்கத்தான் விதானயாரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறன். தொழில் செய்யிறதென்டால்... ஒழுங்கா செய்திருக்க வேணும்! இது.... பக்கத்தில் நாலுபணம் கூட, போட்டானென்டால் அவனுக்கு சாறன் குடுக்கிறதும்.... அவனுகளிட்ட நூல் வாங்கிறதும்.... அதுக்கு, உங்கட வீட்டு முதலாயிருக்க வேணும்! இந்த.... சள்ளெல்லாம் என்னத்துக்கு....? கணக்கு வழக்கைப் பார்த்து தீர்த்துக்குவம்.... எங்க.... அவ....? தொழில் செய்யிறதுக்கு கடன்பட்டுக்கொண்டு வந்தாவே... அவ, அவவைத்தான் வரச் சொல்லு....’’

‘‘அவவும் பிள்ளையளும் அச்சி - விழுது கோருகிறாங்க, என்ன செய்ய வேணுமென்டு என்னட்டச் சொல்லுங்களன்....?’’

‘‘ஒன்னிட்டச் சொல்லி, ஒன்டும் ஆகப்போறதில்ல.... அதுவுமல்லாம, ஒனக்கும் இதுக்கும் அலுவலுமில்ல.... அவவத்தான் கூப்பிடு!!’’

‘‘ஏன், அவியளுக்கு அலுவலில்லாம....? சொல்லிறத, அவியளிட்ட சொல்லுங்க. நான், இங்கால கேட்டுக் கொண்டுதான் இருக்கிறன்... கையில வேல... வந்துக்க ஏலாது....’’

வழக்கத்திற்கு மாறாக, ‘என்ன ஏதென்று’ வந்து கேட்காமல், இருந்த இருப்பிலேயே, செய்யதும்மா சொன்ன பதில், ஹாஜியாரை மட்டுமல்ல, விதானையாரையும் கூடக் கொஞ்சம் துணுக்குற வைத்தது.

‘‘செய்யதும்மா.... நான் விதானையாரும் வந்திருக்கிறன்... நான், என்ட கடமையையும் செய்யவேணும். நீங்க ... தொழில் செய்த வகையில்... ஒழுங்கா நடந்திக்க இல்லையாம்... அதனால கணக்குவழக்கப்பார்த்து, தீர்த்துக் கொண்டு போக ஒங்கட மாமா - ஹாஜியார் வந்திருக்கிறார். இதுக்கு... என்ன சொல்லுறயள்...?’’

‘‘இதுக்கு, என்ன சொல்லுறது... விதானையார்? கணக்கு வழக்கு பார்க்கிறதுக்கு என்ன இரிக்கி...? எல்லாம் தெரிஞ்ச கணக்குத்தானே....? மாமாக்கு, நாங்க, இரண்டாயிரத்துக்குள்ள கொடுமதி இருக்கும். அத நாங்க கொடுப்பம்! கொடுக்காம மௌத்தாக மாட்டம்!!’’

‘‘அது சரிதான் புள்ள.... எப்ப கொடுக்கப் போறயள்...? அதுதானே தெரிய வேணும்...’’

‘‘விதானையார்... இது நாங்க, தொழில் செய்யப்பட்ட கடன்! தொழில் செய்துதான் இறுக்கவேணும்.... மொத்தமா அள்ளிக்கொடுக்க எங்களிட்ட என்ன இரிக்கி....?’’

‘‘அப்பிடித்தான்... என்டாலும், அதுவரைக்கும் ஒரு நம்பிக்கை வேணுமே செய்யிது....’’

‘‘இது வரைக்கும் என்ன நம்பிக்கை இருந்ததாம்? அதுதான் இனியும்....’’

‘‘...........................................’’

விதானையாருக்கு வாயடைத்துப் போயிற்று.

‘‘விதான....! கனக்கக்கதை தேவையில்ல ஆயிரத்தி எண்ணூற்றி நாப்பத்தெட்டு ரூபாவும் சதக்கணக்கும் தருமதி இரிக்கிது... இனி, இவிய என்னிட்ட தொழில் செய்யவும் வேணாம், சாறன் சாமான் தரவும் வேணாம். தரவேண்டிய காசுக்கு, கிடக்கிற தறியையும் பாவையும் கணக்குப் போட்டு தரச் சொல்லு!’’

‘‘எவ்வளவு லேசா இருக்கும்.... நானும் என்ர குமர்குட்டியளும் அஞ்சி வருஷமாக் கிடந்து முதுகுமுள்ளு முறிஞ்சதுக்குப் பொதுவில், நாலு தறிக்கம்பும் ஒரு தறிக்குப்பாவும் இரிக்கிது.... போதாக்கொறைக்கி இரண்டாயிரம் கடனுமிரிக்கிது... தறியையும் பாவையும் கணக்குப் போட்டு தந்திற்று நாங்க தெருவிலயா நிற்கிறது....?’’

‘‘எங்க நின்டாத்தான் எனக்கென்ன....?’’

‘‘அது சரிதான்.... நீங்க அப்பிடித்தான் சொல்லுவியள்... இதுக்கு அல்லாதான் கூலி தரவேணும்! என்ன செய்யிறது...? எல்லாம் மனுசர்ர கைக்குள்ள அகப்பட்டுப் போச்சே.... பால், வார்க்காட்டியும் பால்வார்த்த பானையையாவது பார்க்கப்படாதா...? எங்களிட்டையும் இருந்தால்.... மாமாவும்தான் மருமகளும்தான்! எங்களிட்ட இல்லையே....?’’

‘‘இந்தா... கனக்க கதைக்காத... தருமதிக்கி, இந்த தறியையும் பாவையும் தாறதா, இல்லையா?’’

''என்ர, சீவன் போனாலும் சரிதான் அதுமட்டும் நடக்காது''

''நடக்காதா...? அந்த மட்டுக்கு வந்திற்றயா? ஒரு நெருப்புக்குச்சி சொன்ன வார்த்தை கேட்கும்!''

இடுப்புச்சாறனுக்குள் செருகி வைத்திருந்த நெருப்புப் பெட்டியை கையிலெடுத்தார், ஹாஜியார்

''என்ன செய்யப்போறயள்.....? அல்லாவின் பேரில, சத்தியமா சொல்லிறன்...! என்னவும் நடந்திதோ.... இந்த அரிவாக்கத்திதான் பதில் சொல்லும்....''

செய்யதும்மாவின், அந்த அகோரத் தோற்றத்திற்கு முகம் கொடுக்க, பாவம் ஹாஜியாரால் முடியவில்லை; பக்கத்தில் நின்ற விதானையாரையும் காணவில்லை.

-மருதூர்க்கனி -

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| போடியார் | - | நில உரிமையாளர் |
| ஹாஜியார் | - | ஹஜ் கடமையை நிறைவேற்றியவர் |
| விதானையார் | - | கிராம சேவகர் |
| தறி | - | துணிநெய்வதற்கான இயந்திரம். |
| பாஓடுதல் | - | நூல் ஓடுதல் |
| கொடுமதி | - | கடன் |

## பயிற்சி

1. காமிது ஹாஜியாரின் தோற்றத்தை விபரியுங்கள்.
2. விதானை ஹாஜியாருக்குக் கூறிய யோசனை யாது ?
3. செய்யதும்மா ஹாஜியாருக்குக் கொடுக்குமதியான பணம் எவ்வளவு ?
4. காமிது ஹாஜியாரின் குணப்பண்புகள் எவை ?
5. ''மண் பூனைகளும் எலிபிடிக்கும்'' என்பதிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன ?

## செயற்பாடு

1. இச் சிறுகதைகளில் கையாளப்பட்ட பேச்சு மொழிச் சொற்களின் வடிவத்தையும் அதன் திருந்திய வடிவத்தையும் எழுதுங்கள்.

## ஆக்கத்திறன்

### கேலிச்சித்திரங்கள்




கேலிச்சித்திரம் ஒரு கலைவடிவம். நுட்பமான கலை அம்சங்களைக் கொண்டது. இக்கலை வடிவத்தின் சிறப்பான தன்மை அதற்கு மொழிபேதமோ, எழுத்தறிவுபேதமோ இல்லாமையாகும். கேலிச்சித்திரங்களை ஆக்குவதற்குத் தனித்துவமான திறமை தேவைப்படினும், அவற்றைப் பார்த்து இரசிப்பதற்கோ விளங்கிக்கொள்வதற்கோ மொழியறிவு தேவையில்லை. ஒரு மொழியில் எழுதிய விடயமொன்றை அந்தமொழி தெரிந்தவர்களால் மட்டுமே வாசித்துக் கிரகிக்க முடியும். ஆனால், கேலிச்சித்திரங்களை எந்தமொழி பேசுபவர்களும் விளங்கிக்கொள்ள முடியும்.

இன்று கேலிச்சித்திரம் பிரபல்யமான ஒருகலை வடிவமாக வளர்ந்துவிட்டது. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் மட்டுமல்ல, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற துறைகளிலும் கேலிச்சித்திரம் செல்வாக்குச் செலுத்துகின்றது. தொடக்கத்தில் கோட்டுச் சித்திரங்களினால் உருவான கேலிச்சித்திர அமைப்பு முறை இன்று வளர்ச்சியடைந்து சில எழுத்துக்குறிப்புகளையும் கொண்டு திகழ்கின்றது. அரசியல், சமூக, தனிநபர் நடத்தைகள், குணாம்சங்கள் போன்றவற்றைப் பிரதிபலித்த கேலிச்சித்திரங்கள் இன்று விகடத்துணுக்குகளாகவும், கதை வடிவங்களாகவும் வளர்ந்துள்ளன. அவை மட்டுமன்றி விளம்பரங்களுக்கும் பயன்படுமளவிற்கு இக்கேலிச்சித்திர முறைமை வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்துள்ளது.

கேலிச்சித்திரம் என்ற கலைவடிவம் 1865 ஆம் ஆண்டளவில் சமூக மறுமலர்ச்சிக் காலத்திலேயே தோற்றம் பெற்றதாக அறியக்கிடக்கிறது. 1865ற்கு முற்பட்ட காலத்தில் அது ஒருவித கோட்டுச்சித்திரக்கலை என்று அழைக்கப்பட்டது. 16ம் நூற்றாண்டில் ஜேர்மனியைச் சேர்ந்த அகஸ்தினோகரிக்கி என்பவர் கரிக்கச்சா (Caricatre) எனும் கோட்டுச் சித்திரக் கலையில் பிரபல்யம் பெற்றிருந்ததாக அறியமுடிகிறது. இன்னும் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் கோட்டுச்சித்திரக்கலை வளர்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டிலேயே கோட்டுச்சித்திர வடிவம் அதன் பணி, தன்மை நோக்கிக் கேலிச்சித்திரம் என்னும் வடிவமைப்பைப் பெற்று வளரத்தொடங்கியது. எனவே, கேலிச்சித்திரம் என்பது இலகுவான கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் என்பதையே பிரதிபலிக்கும். இக்கேலிச் சித்திரங்கள் இலகுவாக எவராலும் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருத்தல், கருத்துக்களைப் பிரதிபலித்தல், பல தேவைகளுக்காகப்பயன்படுத்தப்படல், பல ஊடகங்களில் பலமுறை பயன்படல் போன்ற பல பண்புகளைக் கொண்டிருக்கும்.



இயல்பாகவே கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய கேலிச் சித்திரங்கள் நடமாட அல்லது அசையத் தொடங்கினால் உணர்வூட்டம் மென்மேலும் அதிகரிக்கும். இப்படியான ஒரு புதுமையை ''வால்ற் டிஸ்னி" (Walt Disney) அவர்கள் தொடக்கி வைத்தார். அவர் கேலிச் சித்திரங்களை நடமாட வைத்துப் படம் பிடித்துத் திரைப்பட உலகில் புதுமை படைத்தவர். கேலிச்சித்திரத்தையும், திரைப்படத்து-றையையும் இணைத்துப் புதுமையான

கலைவடிவத்தை உலகிற்கு அளித்தவர். உயிருள்ள நடிகர்களால் செய்யமுடியாத காரியங்களை உயிரோட்டமுள்ள கேலிச் சித்திரப்பாத்திரம் மூலம் செய்வித்துக்காட்டிய பெருமை வால்ட் டிஸ்னி அவர்களையே சாரும். இவ்வாறு 'வால்ட் டிஸ்னி' அவர்கள் 'நாயுடனும் பூனையுடனும்' ஆரம்பித்த கேலிச் சித்திரப்படக்கலை இன்று வேகமாக வளர்ச்சியடைந்து திகைப்பூட்டும் படங்கள் பல உருவாவதற்கு வழிவகுத்துள்ளது. ஆரம்பத்தில் நகைச்சுவைத்துணுக்குகளாக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இடம்பெற்ற கேலிச் சித்திரக்கலை இன்று வளர்ச்சியடைந்து பல சித்திரக்கதைகள் பிரசுரமாவதற்கு வழிவகுத்துள்ளது. எனவே, கேலிச்சித்திரங்கள் இன்று பல வடிவங்களாக வளர்ச்சிபெற்று பல்வேறு ஊடகங்களில், பல்வேறு துறைகளிலும் இடம் பிடித்துள்ளமையைக் காணலாம்.

ஆகவே, குறித்த ஒரு கருத்தை மக்கள் மத்தியில் தெளிவாக ஊட்டுவதற்கான ஒரு சிறந்த ஊடகமாகக் காணப்படும் கேலிச்சித்திரங்கள் புதுப்பொலிவு பெற்றுவரும் கலை வடிவமாகும் என்பதை எவரும் மறுக்க இயலாது.

-பூ.சுப்பிரமணியன்-

## அகவுரை

மூளை என்ற ஆய்வு கூடத்தில் விஞ்ஞானம் பிறந்தது. இதயமென்ற ஆய்வு கூடத்தில் கலை பிறந்தது. விஞ்ஞானமும் கலையும் இணைந்து நாகரிகம் பிறந்தது. மனிதனுக்கு நாகரிகம் உண்டு. மிருகத்திற்கு இல்லை. மனிதன் உயர்திணை. மிருகம் அ.்.றிணை. இருந்தும் இந்த உயர்திணை நாகரிக ஜீவிக்கு மிருகத்தின் அமைதி இல்லை.

மனிதன் இன்று ஓர் அவசரச் சூறாவளியில் துரும்பெனச் சுழன்று கொண்டிருக்கின்றான். இந்த அவசர ஆத்மாவிற்கு நெடிய காவியங்கள் சுவைக்க நேரமில்லை. குறுகத்தறித்த கலை வடிவங்கள் தேவை.



ஒரு பத்திரிகையில் கார்ட்டுன் ஓவியரை Editorial Artist என்று அழைப்பார்கள். வாசகர்கள் பத்திரிகையைப் படிக்கத் தவறினும் கார்ட்டுன் சித்திரத்தைப் பார்க்கத் தவறுவதில்லை. கார்ட்டுன் ஓவியர் அன்றாட அரசியலைக் கடைந்தெடுத்து சுவைச் சுருக்கமாகத் தருவதால் சுவைத்துப் போகின்றனர்.

மானுடம் வளர்த்த உபதேசக் கதைகளெல்லாம் கார்ட்டுன் உத்தி கொண்ட கலை வடிவங்களே. ஜாதகக் கதை ஒன்றில் பிராமணன் காளி கோயிலில் ஆடு ஒன்றைப் பலியிடக் கத்தி தூ க்குகின்றான். ஆடு முதல் சிரித்தது; பின் அழுதது. பிராமணனோ வியப்பில் ஏன் சிரித்தாய்? எனக் கேட்டான்.ஆடு அமைதியாக நீ என்னை வெட்டுவதால் நான் செய்த பாவம் நீங்கி மோட்சம் போவேன். அதை எண்ணிச் சிரித்தேன். பின்பு நீ என்னை வெட்டுவதால் நரகம் போகப் போகிறாயே என எண்ணி அழுதேன் என்றது. இந்தக் குட்டிக்கதை மூன்று சதுரங்களுக்குள் அடங்கக்கூடிய கருவூலமே. மனித மனத்தில் மதம் வேர் பரப்பி வளர்ந்து விரிந்து விருட்சமாக நிற்பதற்கு இந்தக் கார்ட்டுன் சுவை கொண்ட ஓவியங்களும் ஒரு காரணமே.

அடுத்தாற்போல் மக்கள் மனதை ஆட்சி செய்வது அரசியல். கார்ட்டுன் என்பது சிறுமையை நளின நையாண்டியுடன் பூதாகரமாகப் படம் வரைந்து காட்டும் வித்தகம். சர்வாதிகாரி ஹிட்லர் அக்கினிக் குண்டுகளை அள்ளிக் கொட்டி ஐரோப்பாவைத் தகனம் செய்து கொண்டிருந்த காலமது. உலக மக்கள் எரிமலை விளிம்பில் நிற்பது போல் நடுங்கினார்கள். தூரிகையைத் தூக்கினார் டேவிட்லோ. அவரின் தூரிகை, கார்ட்டுன் கணைகளை ஹிட்லர்

மேல் உமிழ்ந்தது. ஹிட்லர் நிலைகுலைந்தான். ஹிட்லரின் தோல்விக்கு டேவிட்லோவின் கார்ட்டூன்களும் ஒரு காரணம் என வரலாறறிந்தோர் கூறுகின்றனர்.

ஜவகர்லால்ஜியையும் இந்தக் கார்ட்டூன் வித்தை விரட்டியது. கார்ட்டூன் வித்தகர்களுடன் வினயமாகப் பழகினாராம். பிரபல கார்ட்டூன் ஓவியர் சங்கர் வீடு போய் டின்னர் ரேபிள் நாற்காலியில் உட்கார்ந்து தனக்கும் சாப்பாடு போடும்படி கேட்பாராம்.

கவிக்குயில் சரோஜினி தேவிக்கு டிஸ்னியின் கார்ட்டூன் என்றால் கரும்பு சுவைத்த இன்பம், சரோஜினியவர்கட்கு முதன் முதலாக காந்தியை அறிமுகப்படுத்திய போது Who is this Micky Mouse எனக் கேட்டார். காந்தியோ ஆத்திரங் கொள்ளவில்லை, சிரித்தார். தன்னை எலியாக Micky Mouse பாத்திரத்திற்கு ஒப்பிட்டதை எண்ணி கலகல எனச் சிரித்தார்.

அன்று, இலங்கை அரசியல் வாதிகள் கொலட் அவர்களின் கார்ட்டூன் படங்களுக்கு கலங்கினார்கள். இலங்கையில் கொலட் சிறந்த கார்ட்டூன் ஓவியராக விளங்கினார். இலங்கை அரசியல்வாதிகள் பாம்பின் படத்தைக் கண்டு அஞ்சுவது போல் கொலட்டின் படங்களைக் கண்டு அஞ்சினார்கள். தமது கலக்கத்தை அன்றைய பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்காவிடம் முறையிட்டார்கள். பிரதம மந்திரியவர்கள் “நாடும் சிரிக்க வேண்டுமல்லவா?” என அவர்களுக்குச் சமாதானம் கூறினார்.

சேர் ஜோன் கொத்தலாவல மற்றைய அரசியல் வாதிகளிலும் வேறுபட்டவராய் விளங்கினார். தன்னைக் கிண்டல் செய்த படைப்புகளை நன்றாகச் சுவைப்பார். அது மட்டும் அல்லாது அந்தப் படைப்புகளைப் பத்திரிகையாளர்களிடம் பணம் கொடுத்து வாங்கிச் சட்டமிட்டு தன் அறையில் தொங்க வைத்து ரசித்தார்.

இந்த அங்கத ஓவியக் கலையைத் தமிழ் மக்களுக்குள் வளர்த்த பெருமை ஆனந்த விகடனைச் சாரும். மாலி என்ற அபூர்வ அங்கத ஓவியரில் ஆரம்பமான இக்கலை சாமா, தானு, ஸ்ரீதர், கோபுலு என்று வந்து இன்று மதனின் கைவரிசையில் நிற்கின்றது.

மாலி ஒரு சிறந்த கார்ட்டூன் ஓவியர் மட்டுமல்ல அவர் ஓர் Caricature ஓவியருமாவார். ‘கரிக்கச்சர்’ ஓவியம் என்பது ஒருவரின் தனித்துவமான இயல்பை இனங்காட்ட அதை மிகைப்படுத்தி வரைவதாகும். எல்லா மனிதர்களின் உறுப்பு, உடை, நடை பாவனையில் தனித்துவமுண்டு. அதை இனம் கண்டு அங்கதச் சுவை கொண்ட ஓவியம் வரைவதில் மாலி சாதுரியமானவர். அவர் வரையாத கர்நாடக சங்கீத வித்துவான்களே இல்லை எனலாம். அவர்கள் பாடும் போது புரியும் அங்க சாஹசங்களைளெல்லாம், மாலி அங்கத ஓவியங்களாக வடித்திருக்கின்றார். தூரிகையால் சித்திர சாஹசங்கள் செய்த மாலி கமராவாலும் செய்யத்தவறவில்லை. அவர் மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் மெய்மறந்து பாடும் போதும், சில சங்கீதப் பிடிகளை அழுத்திப் பாடும் போதும், லாகவமாகப் பிடித்த கமராப் படங்கள் ‘கரிக்கச்சர்’ ஓவிய உலகில் சிறந்த கலைப் படைப்புகள் என்றே கூறவேண்டும். இந்தப் புகைப் படங்கள் 1939ம் ஆண்டு ஆனந்த விகடன் மலரை அலங்கரித்தன.

இலங்கையில், தமிழ் மக்களுக்குள் கலை, பணப் போஷாக்குச் சத்து இல்லாததால் சோகை பிடித்த நிலையில் வாடிக் கொண்டிருக்கின்றது. கல்விக்கு பணம் இறைக்கும் மக்கள் கலைக்குக் கிள்ளியும் தெளிப்பதில்லை. கல்வியில் உத்தியோகமுண்டு. சம்பள அறுவடையுமுண்டு என்பதே இதற்குக் காரணம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்குள் கார்ட்டூன் கலை பற்றி எழுதப் புகும்போது நான் சுயபுராணம் பாடியே ஆகவேண்டும். சுயபுராணம் எல்லோர் காதுக்கும் நாதமாக இருக்காது. என் செய்வது ... நான் பாடித்தான் ஆக வேண்டும்.

இந்தியாவில் வந்தே மாதரம் என்ற சுதந்திர மந்திரம் வானை முட்டிய காலமது. அப்போ நான் பம்பாயில் மாணவனாக இருந்தேன். நானும் ஓர் அடிமை நாட்டவனாகையால்

அந்த மந்திரம் என்னையும் ஆட்கொண்டது. நானும் சுதந்திர எழுச்சி அலையில் மிதந்தேன். சுதந்திரப் போராட்டத்தில் பங்காளியாவதற்கு எனது சித்திர ஆற்றல் கை கொடுத்தது. சர்ச்சிலும் ஹைதரபாத் நிசாம் மன்னனும் இந்தியாவிற்கு எதிராக சதியாலோசனை செய்யும் கார்ட்டுன் ஒன்றை வரைந்தேன்.



Blitz பத்திரிகை ஆசிரியர் கரஞ்சியா அதை பிரசுரத்திற்கு ஏற்றுப் பணமும் தந்தார். நான் வாழ்க்கையில் முதன் முதலாக வரைந்த கார்ட்டுன் பிரபலமான பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொலுவீற்றிருந்தது. சந்தோஷத்தைச் சொல்லவும் வேண்டுமா? பம்பாய் வாழ்மக்கள் எல்லோரும் என் கார்ட்டுன்களைப் பார்க்கிறார்களா என்று அறிவதற்கு பஸ் ஏறி நகரை வலம்வந்தேன். என் கன்னிப் படைப்புக்கு கிடைத்த சன்மானமாகையால் அந்தப் பணத்தைச் செலவிட விரும்பவில்லை. பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்தேன் இடைக்கிடை எடுத்துப் பார்த்து எனது கலைக்குக் கிடைத்த பொற்கிளி என எண்ணிப்பூரிப்பேன் ஒரு நாள் பண நெருக்கடி வர அந்தப் பொற்கிளி பறந்தே போய்விட்டது.

முதற் கார்ட்டுன் பிரசுரமான நாள் முதல் அபிராமி பட்டர் பக்தர் போல் நின்றும், இருந்தும், நடந்தும் கார்ட்டுனே என் தியானமாகிவிட்டது. எனது கார்ட்டுன்கள் பம்பாய் பத்திரிகைகளில் பவனி வந்தன.

நான் கார்ட்டுன் வரைந்த காலத்தில் சங்கர், ஆர். கே. லக்ஷ்மன், அபு, பால் தக்கரே ஆகியோர் இந்தியாவின் புகழ் பூத்த கார்ட்டுன் ஓவியர்களாக விளங்கினார்கள். பால் தக்கரே பாரதி பாடிய சிங்மராட்டியர் இனத்தைச் சேர்ந்தவர். அந்த இனத்தை சேர்ந்த பால் தக்கரே பாரதியின் இனத்தவருக்கு எதிராக சிவசேனை இயக்கத்தை உருவாக்கினார். ஹிட்லர், சர்ச்சில், ஐசென்ஹோவர் எல்லோரும் சிறந்த ஓவியர்கள். காலம் அவர்களைத் தூரிகையை வைத்து விட்டு துப்பாக்கி ஏந்தச் செய்தது. பால் தக்கரேயையும் காலம் தூரிகையை வைத்து விட்டு, போர்க்கொடி உயர்த்தச் செய்தது.

இந்திய வாழ்க்கை முடிந்து நான் இலங்கைக்கு வந்தேன். தினகரன் ஆசிரியராகக் கடமை புரிந்த பேராசிரியர் கைலாசபதியவர்கள் தினகரனில் சவாரித்தம்பர் கார்டுன் வரையச் சந்தர்ப்பம் அளித்தார். சவாரித்தம்பர் சித்திரத் தொடரும் தினகரனில் பவனி வரத்தொடங்கியது. பட்டி தொட்டி, தோட்டம் துரவு எங்கும் சவாரித்தம்பர் பேச்சாகவே இருந்தது. கவிஞர் விடிவெள்ளியும் ''தம்பரைக் காணாத நாளெல்லாம் நாமிங்கு பிறவா நாளே'' என்று தம்பர் புராணம் பாடியுள்ளார்.

நான் இந்தியாவில் இருக்கும் காலத்தில் வரலாற்று ஏட்டை நிரப்பும் நிகழ்வுகள் தொடர்ந்தன. நாசகார அணு குண்டு நாகசாக்கி, ஹிரோஷிமாமேல் போடப்பட்டது. உலகை சம்ஹாரம் செய்து கொண்டிருந்த இரண்டாம் உலக யுத்தம் முடிவிற்கு வந்து சமாதானம் ஏற்பட்டது. அகண்டபாரதத்தில் இருந்து பாகிஸ்தான் என்ற நாடு பிரிந்தது. மகாகவி தாகூரால் மகாத்மா என்று கௌரவிக்கப்பட்ட அஹிம்சா மூர்த்தி காந்தி ஓர் இந்து வெறிஞனால் சுடப்பட்டார். இந்த வரலாற்றுக்காலம் என் இதயத்தில் அழியாத அழுத்தங்களை ஏற்படுத்தியது.

அன்று வானொலி நேயர்களின் பட்டியல் நெடியது; திரைகானமே அவர்களின் தியானமாக இருந்தது. நானும் திரைப்பாடலைச் சிந்தித்தேன். சித்திரம் தோன்றியது. ஒரு கசாப்புக்கடைக்காரன் கத்தியுடன் நின்று ஆட்டை அணைத்து குழைதின்னக் கொடுக்கின்றான் இந்தச் சித்திரத்தை வரைந்து அதன் கீழ் 'அணைக்கின்ற கைதான் அடிக்கும்' என்ற கவிதை வரிகளை எழுதினேன். இந்தக் கார்ட்டுன் சித்திரத்திற்கு, சித்திரகானம் எனப் பெயரிட்டேன் இந்தச் சித்திர கானப் படைப்புக்கும் ஒரு பெரும் ரசிகர் படைதிரண்டது.

என் நினைவு மீண்டும் இந்தியா போகிறது. மாதுங்காவில் பாரதி விழா நடைபெற்றது. அதற்கு பாரதியின் நண்பனான வா.ராவை அழைத்திருந்தார்கள். வா.ரா கொன்றை மலர்க்கொத்தென இலக்கியத் தோரணங்கள் குலுங்கப் பேசிக்கொட்டினார்; வா.ரா தான் வீரகேசரியில் ஆசிரியராக இருந்த காலத்தையும் சுவைசொட்டப்பேசினார். அன்று வீரகேசரியில் என் கார்ட்டூன்கள் வெளிவர வேண்டுமென்ற ஆசை அருட்டியது. இலங்கை வந்ததும் பாணன் என்ற புனைபெயரில் அரசியல் கார்ட்டூன்கள் வரையலானேன். வீரகேசரியிலும் என் சமூகச் சித்திரங்கள் வெளிவந்தன. சவாரித்தம்பர், சித்திரகானம், மைனர் மச்சான் என்ற சித்திரங்கள் பிரசுரமாயின.

மைனர் மச்சான் காரியாலயப்படிகள் ஏறி No Vacancy போர்ட்டை தரிசித்தவர். மனம் தளரவில்லை; காதலுக்கு தூண்டில் போடுவார். அதிலும் துரதிஷ்டம் தான். ஆனால், நம்பிக்கை ஒளியுடன் தேடும் படலத்தைத் தொடர்ந்தார். சில சமயங்களில் அவரை விரக்தி சுட்டெரிக்கும். அப்பொழுது கொஞ்சம் 'தண்ணி' ஊற்றித் தணித்துக் கொள்வார். இதுவே அவரின் வாழ்க்கைச் சித்திரம். மைனர் மச்சான் பாத்திரம் சில புனித ஆத்மாக்களுக்குப் பிடிக்கவில்லை. வாலிபர்களின் விரக்தி வெப்பம் உலகையே சுவைக்கிறது. மைனர் மச்சான் அப்படி என்னதான் எமது சமூகத்தை மாசுபடுத்தி விட்டார்?

மேடைகளில் எல்லாம் மண்வாசனை இலக்கியமெனப் பேசுகிறோம். ஆனால் எமது மண்ணில் வாசனைக்குப் போதிய இலக்கிய ஏடுகளில்லை. மண்ணில் தோன்றும் சஞ்சிகைகளும் சில காலத்தின் பின் மாயமாய் விடுகின்றன. மண்ணில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளும் பொருளாதார ஆதரவில்லாது ஒரு இலட்சிய மூச்சில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நானும் இந்தச் சூழலில் சிரித்திரன் சஞ்சிகையை ஆரம்பித்தேன். ஒரு பத்திரிகையின் ஜீவாதார சுருதி விளம்பரமென்பார்கள். விலா எலும்பு தேய விளம்பரம் தேடினேன். சிரித்திரன் குழந்தை தவழ்ந்து தத்தக்கப் பித்தக்கவென நடந்து ஓட ஆரம்பித்தான்.

சிரித்திரன் பாத்திரங்களில் சுவையை வாசகர் கண்டனர். மிஸ்ட்டர் - அன்ட் மிஸ்ஸ ிஸ் டாமோடிரன் குடும்பத்தினர் தமிழ் இனத்தவராயினும் அவர்களின் அடுக்களை மொழிகூட ஆங்கிலமாகவே இருந்தும் அவர்கள் தமிழ் கலாசாரத்தில் அக்கறை காட்டினர். தமிழ் கலை கலாசாரங்கள் பற்றி மிஸ்ஸிஸ் டாமோடிரன், எழுப்பும் கேள்விகளுக்கெல்லாம் மிஸ்ரர் டாமோடிரன் தமிழ் கலாசாரத்தின் பாதுகாவலர் போல் பதில் உறுத்துகின்றார். மிஸ்ஸிஸ் டாமோடிரன், ''டார்லிங் வட் இஸ் கடைச்சங்கம்'' என்று கேட்கின்றார். ''மைகோட் இது தெரியாதா? சங்கக்கடைதான் கடைச்சங்கம்'' என பதில் உறுத்துகின்றார். இன்னும் ஒருமுறை மிஸ்ஸிஸ் டாமோடிரன், ''டார்லிங் வட் இஸ் கும்மியடி'' எனக் கேட்கின்றார். அதற்கு மிஸ்ரர் டாமோடிரன் ''வட் டார்லிங் இது தெரியாதா? அது சீனடி சிலம்படி மாதிரி ஒரு அடி என்கிறார்''. அதற்கு மிஸ்ஸிஸ், ''அப்போ டார்லிங் திருடன் வீட்டிற்கு வந்தால் கும்மியடிக்கலாமா?'' என்கிறார்.

கார்ட்டூன் ஓவியருக்கு பெரும்கேலி எதுவென்றால், கார்ட்டூனை தமிழில் கேலிச்சித்திரம் என்று கூறுவது தான். சமூகத்திற்கு சத்தான சிந்தனையைச் சித்திரிக்கும் ஓவியத்தை எப்படி கேலிச்சித்திரமென்பது? சிந்தனையின் ஆழத்திலிருந்து எழும் குமிழியே சிரிப்பு. கார்ட்டூன் கலையைக் கேலிச்சித்திரமென்பதற்கு கார்ட்டூன் கலை வெறும் கோமாளிக் கூத்தல்ல. பூமியாகிய பூகோளத்திற்கு மேல் ஒரு சமாதானப்புறா அச்சத்தில் அசந்து போய் நிற்கிறது. புறாவின் தலையையும் கழுத்தையும் வரைந்து அதன் உடலை அணுகுண்டாய் வரைந்திருந்தேன். சாவா சமாதானமா என்ற கருப்பொருள் கொண்ட கார்ட்டூன் என்ன, கேலிச்சித்திரமா?

நாகரிகம் நதிக்கரையில் பிறந்ததென்றால், கலை கண்ணீர்க் கங்கைக் கரையில் பிறந்ததென்று தான் கூறவேண்டும். கலைஞனின் கண்ணீரே கலைமுத்துக்களாகின்றன.

நவீன பாணி ஓவியர் மனதில் பதிந்தவற்றையே மனப்பதிவு ஓவியம் (Impressionism) என்று வரைகின்றார்கள். சமூக கார்ட்டுன் ஓவியர்கள் மனப்பாதிப்பில் ஏற்பட்டவற்றையே கார்ட்டுன்களாக வரைகின்றனர். நானும் வீடு தேடும் படலம், வாடகை வீட்டில் அழுந்திய படலம், பிள்ளைகளுக்குப் பாடசாலையில் இடம் தேடும் படலம் என்பவற்றையும் என் தூரிகையால் கண்ணீராக வடித்தேன். இனவாதப் பாதிப்புக்களையும் கார்ட்டுனாக வரைந்தேன்.

(Creative Pleasure) படைத்தலில் இன்பம் கண்டபடியினால்தான் தொடர்ந்தும் கார்ட்டுனைச் செய்யக் கூடியதாகவிருந்தது. கார்ட்டுன் ஓவியத்தில் பற்றிருந்தபடியினால் தான் அதனை வரைந்தேன். இனவாத இன்னல்களால் பாதிக்கப்பட்ட போதும் அவைகள் அனைத்தையும் கார்ட்டுன்களாக வரைந்தேன்.

மேல் நாட்டில் கார்ட்டுன் ஓவியர்கள் எல்லாரும் பெரும் செல்வந்தர்களாய் இருக்கிறார்கள். எனது நிலை அப்படி இல்லையாயினும், எனக்குக் கார்ட்டுனில் பற்றிருந்தபடியினால் கார்ட்டுன்களைத் தொடர்ந்து வரைந்தேன்.

ஒருவனது வாழ்க்கையின் வெற்றி தோல்வி என்பது அவன் செய்யும் தொழிலில் பற்றுவைப்பதிலே இருக்கின்றது. இந்த நாட்டில் கார்ட்டுன் ஓவியத்தால் பணம் கிடைக்காது என்றபோதும் தொடர்ந்து வரைந்தேன். என்னை ஒருவர் 'உனது வாழ்க்கையில் வெற்றியா? தோல்வியா?' என்று கேட்டால்' 'வெற்றி' என்று தான் கூறுவேன். எனது உற்றார் உறவினரைப் பொறுத்த அளவில் அது பெரும் தோல்வி, என்னைப் பொறுத்தளவில் அது வெற்றி.

-சி. சிவஞானசுந்தரம்-

## பயிற்சி

1. கேலிச்சித்திரங்களின் பண்புகள் ஐந்து தாருங்கள்.
2. உலகப் புகழ்பெற்ற கேலிச்சித்திரங்களை இனங்கண்டு தொகுக்க முயற்சியுங்கள்.
3. பத்திரிகைகளில் வெளிவரும் கேலிச்சித்திரங்கள் சிலவற்றைத் தொகுத்து 'கேலிச்சித்திர நூல்' ஒன்றை ஆக்குங்கள்.
4. உங்கள் அனுபவம், கேலிச்சித்திர ஆற்றல் என்பவற்றைக் கொண்டு சில கேலிச் சித்திரங்களை ஆக்குங்கள்.
5. கார்ட்டுன் சித்திரம் என்பதற்கான தமிழ்ச்சொல்லாக கேலிச்சித்திரம் அமையவில்லை எனக் கூறப்பட்டுள்ளதற்கான காரணங்களை எழுதுக.
6. கார்ட்டுன் சித்திரத்துறைக்குப் பங்களிப்புச் செய்த காட்டுன் ஓவியர்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துங்கள்.
7. 'கரிகச்சர்' (Cari Cature) ஓவியத்தின் இயல்புகளை எடுத்துக் காட்டுங்கள்.
8. கார்ட்டுன் ஓவியத்துறையில் சிவஞான சுந்தரத்தின் பங்களிப்புப் பற்றி எடுத்துக் கூறுங்கள்.

## செயற்பாடு

1. நீங்கள் பெற்ற வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட கேலிச்சித்திரங்களை வரைந்து, பொருத்தமான உரையாடலையும் சேர்த்து காட்சிப் படுத்துங்கள்.

# பழமொழிகள்

பழமொழிகள் ஒரு சமூகத்தின் பண்பாட்டை விளக்குவதாகும். பண்பட்டு வாழ்ந்த வாழ்க்கையின் சாரமாக விளங்குவன பழமொழிகளே. இப்பழமொழிகளைக் கொண்டே மொழியின் வளத்தை, மக்களின் பண்பாட்டினை, வாழ்க்கை நடைமுறைகளை அறிய முடியும்.

அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.

உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.

எண் இல்லாதவர் கண் இல்லாதவர். எழுத்தில்லாதவர் கழுத்து இல்லாதவர்.

ஏர் உழுகிறவன் இழப்பமானால் எருது மச்சான் முறை கொண்டாடும்.

சேற்றில் புதைந்த யானையைக் காக்கையும் கொத்தும்.

தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்ப்பதா?

தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்துவிட்டவனுக்கே கொட்டும்.

யானை படுத்தால் குதிரை மட்டம்.

வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை.

### பயிற்சி

1. பின்வரும் பழமொழிகளை வைத்து வாக்கியங்கள் அமையுங்கள்.
    1. தீராக்கோபம் போராய் முடியும்
    2. அடாது செய்பவன் படாது படுவான்.
    3. குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
    4. செத்த நாய் திரும்பக் கடியாது
    5. தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்ப்பதா?
2. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுங்கள்.
    1. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல்
    2. ஆபத்தின் போது நண்பர்கள் உதவாமை
    3. வஞ்சகர்க்கு உதவி செய்தும் பயன் கிடையாமை

### செயற்பாடு

மேலும் சில பழமொழிகளைக் குழுவாகச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள். (தரம் 9,10 பாடநூல்களை உசாத்துணையாகக் கொண்டு ஓரே பொருள் குறிக்கும் வெவ்வேறு பழமொழிகளைச் சேகரித்து எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# செய்வினையும் செயப்பாட்டுவினையும்

## செய்வினை

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.

நான் படம் பார்த்தேன்.

தம்பி வீடு கூட்டினான்.

மேலுள்ள வாக்கியங்களில் பார்த்தேன், கூட்டினான் ஆகிய வினைகள் உள்ளன இவை முறையே நான், தம்பி ஆகியவற்றை எழுவாயாகக் கொண்டுள்ளன.

இங்கு எழுவாயே வினையின் கருத்தாவாகவும் உள்ளது. அதாவது பார்த்தவன் நான். கூட்டியவன் தம்பி இவ்வாறு, எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகள் செய்வினை.

## செயப்பாட்டு வினை

பாரதி குயில்பாட்டு எழுதினார். (செய்வினை)

என்ற வாக்கியத்தில் பாரதி - எழுவாய்; குயில்பாட்டு - செயப்படுபொருள். எழுதினார் செய்வினை.

இனி,

இவ்வாக்கியத்தை பொருள் சிதையாமல் மாற்றி எழுதிப்பார்ப்போம்.

குயில் பாட்டு பாரதியால் எழுதப்பட்டது. (செயப்பாட்டு வினை)

முதல் வாக்கியத்தில் செயப்படுபொருளாக இருந்த குயில்பாட்டு இந்த வாக்கியத்தில் எழுவாய்.

முதல் வாக்கியத்தில் எழுவாயாக இருந்த பாரதி, இந்த வாக்கியத்தில் ஆல் உருபு (பாரதியால்) ஏற்று கருத்தாப்பொருளில் வந்துள்ளது.

முதல் வாக்கியத்தில் எழுதினார் என்னும் வடிவில் அமைந்த வினை, இந்த வாக்கியத்தில் எழுதப்பட்டது என்றும் அமைகிறது. இவ்வாறு

செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினைசெயப்பாட்டு வினை எனலாம். செயப்படுபொருள் குன்றாவினைகளே செயப்பாட்டுவினைகளாக அமையும்.

## செயப்பாட்டு வினையின் அமைப்பு

செய்வினையில் அடிச்சொல் அடிப்படை வடிவத்தில் இருக்கும் உ-ம்

பார்த்தேன் - பார்

மூடினான் - மூடு

குடித்தது - குடி

கொன்றது - கொல்

செயப்பாட்டுவினையில் அடிச்சொல் செய்ய என்றும் வாய்ப்பாட்டுவினை எச்ச வடிவில் இருக்கும். உ-ம்

| | | |
|---|---|---|
| கொல்லப்பட்டான் | - | கொல்ல |
| மூடப்படும் | - | மூட |
| எரிக்கப்பட்டது | - | எரிக்க |
| திறக்கப்படும் | - | திறக்க |

அதாவது செயப்பாட்டுவினையின் அமைப்பை பின்வருமாறு விளக்கலாம்

| | | வினையெச்சம் | படு | கால இடைநிலை | திணைபால்விகுதி |
|---|---|---|---|---|---|
| கொல்லப்பட்டான் | - | கொல்ல | படு | ட் | ஆன் |
| கொல்லப்படுகிறான் | - | கொல்ல | படு | கிறு | ஆன் |
| கொல்லப்படுவான் | - | கொல்ல | படு | வ் | ஆன் |

என அமையும். மேலும்,

அமைச்சரவை கலைக்கப்பட்டது.
நிரபராதி விடுதலை செய்யப்பட்டார்.

என்பனவும் செயப்பாட்டுவினை வாக்கியங்கள்.
இவற்றில் - ஆல் உருபு ஏற்ற கருத்தா மறைந்துள்ளது.

அமைச்சரவை ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது.
நிரபராதி நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டார்.

இத்தகைய கருத்தா இல்லாத செயப்பாட்டுவினை வாக்கியங்கள் தற்காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

## பயிற்சி

1. பின்வரும் செய்வினைகளை செயப்பாட்டுவினைகளாக மாற்றுங்கள்.

| செய்வினை | செயப்பாட்டுவினை |
|---|---|
| கட்டினான்<br>வெட்டினான்<br>கொன்றான்<br>எழுதினான்<br>அடித்தான் | |

2. பின்வரும் செய்வினை வாக்கியங்களை செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றுங்கள்.

    1. இராமன் இராவணனைக் கொன்றான்.
    2. நான் கொப்பிகள் வாங்கினேன்.
    3. மக்கள் பயிர் செய்வதற்காக காடுகளை அழித்தனர்.
    4. பறவைகள் பழங்கள் உண்டன.
    5. பாரதி பல பாடல்கள் பாடினார்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## தன்வினையும் பிறவினையும்

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்

தம்பி படித்தான்.

தாய் குழந்தைக்கு உணவை ஊட்டினாள்.

முதல் வாக்கியத்தில் படித்தான் (படித்தல்) என்னும் வினையை நிகழ்த்தியவன் தம்பி- அவனே இவ்வினையின் கருத்தா - படித்தல்- என்னும் செயலுக்குஉட்பட்டவனும் அவனே. அதாவது, வினையை நிகழ்த்துபவரும் வினையின் பயனை அடைபவரும் ஒருவரே. இரண்டாவது வாக்கியத்தில் வினையை நிகழ்த்துபவர் -தாய்- (எழுவாய்) வினையின் பயனை அடைந்தவர் - குழந்தை. அதாவது,

> ஒரு வினையின் பயன் கருத்தாவையன்றி (எழுவாய்) பிறிதொருவரை அல்லது பிறிதொன்றை அடைகிறது.

1. சமுதாயச்சீர்கேடுகளைக்களையப் புதுமை நூல்கள் பல தோன்றின.

2. இந்த நூல்கள் சமுதாயத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தன.

முதல்வாக்கியத்தில் எழுவாயாக நிற்கும் நூல்களே பயனிலையாக நிற்கும் தோன்றின எனும் வினைமுற்றின் செயலைச் செய்கின்றன. இரண்டாவது வாக்கியத்தில், தோன்றியவை மாற்றங்களே தவிர நூல்கள் அல்ல. இந்த மாற்றங்கள் தோன்றுவதற்கு நூல்கள் காரணமாக அமைந்திருக்கின்றன.

ஆகவே,

ஒரு செயலை எழுவாயே செய்வதைக் காட்டுவது தன்வினை. எழுவாய் தானே செய்யாமல் அதே சமயம் அந்தச் செயல் நடைபெறக் காரணமாக அமைவதைக் காட்டுவது பிறவினை.

### பயிற்சி

1. பின்வரும் சொற்களைத் தன்வினைகள் பிறவினைகள் எனப் பட்டியற் படுத்துங்கள். பெருகு, நட, சிரி, இருத்து, உருட்டு, அடங்கு, வாழ்த்து, செலுத்து, திருத்து, பயிற்று, திருப்பு, காண்
2. பின்வரும் தன்வினைகளை பிறவினைகளாக மாற்றுங்கள். ஆடு, திரும்பு, நட, கரை, விழு, தேய், இரு, அழி, படி, கெடு
3. பின்வரும் வாக்கியத்திலும், பாடலிலும் காணப்படும் தன்வினை, பிறவினை களை இனங்கண்டு எழுதுங்கள்.

   அ. ஏசுநாதரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்த வீரமாமுனிவர் தமிழின் இனிமையில் ஈடுபாடு கொண்டு தமிழ் இலக்கியங்களைக் கற்றார். தேம்பாவணி எனும் சிறந்த காவியத்தையும் படைத்தார்.

   ஆ .‘‘மணிக்கதவம் திறவாயோ மறப்பை
   எல்லாம் தவிர்த்தே மாற்றறியாப்
   பொன்னே நின் வடிவது
   காட்டாயோ !
   கணக்கறியாப் பெருநிலையில்
   என்னோடு நீ கலந்தே
   கரைகடந்த பெரும்போதம்
   கண்டிடச் செய்யாயோ!’’

ஒப்படை:- ஆசிரியர் வழங்கிய சிறுகதையொன்றில் காணப்படும் தன்வினைகள் பிறவினைகளைத் தொகுத்துத் தாருங்கள்.